

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய தினசரி சந்தை கட்டடத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர்மன்றத் தலைவர் கு.பாப்புக்கண்ணன், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சரஸ்வதி ராஜேந்திரன் உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மின் கழக தொ.மு.ச ஆர்.தங்க மாரிமுத்து இல்ல மணவிழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

தென்காசி.செப்.7-

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன் கோவிலில், சங்கரன்கோவில் ராஜபாளையம் சாலையில் உள்ள சுரித்திக்ஸ் மகாலில் மின் கழக தொ.மு.ச. திட்ட தலைவர் ஆர்.தங்க மாரிமுத்து இல்ல மணவிழா நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று சீர்திருத்த திருமண விழாவை நடத்தி வைத்தார்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் மின் கழக தொ.மு.ச.திட்ட தலைவர் ஆர். தங்கமாரிமுத்து டி. மல்லிகா ஆகியோர் களின் புதல்வன் மருத்துவர் டி. ஜெயராமுக்கும், எம்.சோலைராஜன், எஸ். சசிவேணி ஆகியோர்களின் புதல்வி மருத்துவர் எஸ். துர்காப்பிரியா ஆகியோரது திருமண நிகழ்வு சங்கரன் கோவில் ராஜபாளையம் மெயின் சாலையில் அமைந்துள்ள சுரித்திக்ஸ் மஹாலில் நடைபெற்ற திருமண விழா நிகழ்வு கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமை ஏற்று சீர்திருத்தத் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்கள்.

அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசியதாவது.

இந்த திருமண நிகழ்வு இனிதே நடத்தி முடித்திருக்கிறது.திருமணத்தை நடத்திக் கொடுக்க வாய்ப்பு கொடுத்த மண வீட்டாருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.இனிதாக நடந்தேறி இருக்கக்கூடிய இந்த திருமண அழைப்பிதழை பார்க்கும் பொழுது இருவருமே மருத்துவர்கள் என்று பார்க்கும் பொழுது மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது.இந்த மேடையே திராவிட இயக்கத்தின் வெற்றிக்கு ஒரு சான்றாக வும் அமைந்திருக்கிறது. என்ற அந்தப் பெருமை நம் அத்தனை பேர்களின் மனதிலும் எழுகிறது.நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இருக்கக்கூடிய திராவிட முன்னேற்ற கழகத்தின் மூத்த முன்னோடிகளே, முன்னணி செயல் வீரர்களே, நண்பர்களே, மண வீட்டு நிகழ்ச்சிக்கு வந்திருக்கக்கூடிய உற்றார், உறவினர்களே உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.இந்த மண வீட்டு நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதில் ஒரு பெருமையும் எங்களுக்கெல்லாம் இருக்கிறது.

தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற குடும்பம், மணமகனின் குடும்பம்.எந்த சோதனைகள் வந்தாலும் கழகம் அறிவிக்கக்கூடிய எந்தப் போராட்டமாக இருந்தாலும், அவர்களின் குடும்பங்களை சார்ந்தவர்கள், மணமகன் தந்தை தங்க மாரிமுத்து அவர்கள் அதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள தவறியதே கிடையாது.அப்படிப்பட்ட ஒரு குடும்பத்தின் இங்கே இருக்கக்கூடிய மணமகளும், மணமகனும் தன்னுடைய சமூக பொறுப்பை உணர்ந்தவர்களாக இன்று தாங்கள் அடைந்திருக்க கூடிய மேன்மை எல்லாம் மக்களுக்கு தொடர வேண்டும். அடுத்த தலைமுறைக்கும் சென்றடைய வேண்டும் என்ற அந்த விழிப்புணர்வை பெற்றவர்களாக தான் இன்று இந்த மேடையில் மருத்துவர்களாக அமர்ந்திருக்கிறோம் என்றால் அதற்கு எத்தனை பேர் தந்தை பெரியார் அவர்களிலே தொடங்கி பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் இன்று நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் என்று எத்தனை பேருடைய உழைப்பு சிந்தனை, அதில் இருக்கிறது என்பதை உணர்ந்த மணமக்களாக அதை அடுத்த தலைமுறைக்கு நிச்சயமாக கொண்டு செல்ல வேண்டும், என்ற அதைக் கருத்தினை கொண்டு உழைக்கக் கூடியவர்களாக தங்களுடைய தேர்ந்து எடுத்துக் கொண்டிருக்க கூடிய தொழிலில், தொழில் நிலை எந்த அளவுக்கு கவனமும், அக்கறையும் பெற்றவர்களாக இருக்கிறார்களோ, அதே போல இந்த சமூகத்தை பற்றிய பொறுப்பும், அக்கறையும் கொண்டவர்களாக பணியாற்ற வேண்டும், பணியாற்ற வேண்டும் என்று அவர்களை வாழ்த்தி மகிழ்கிறேன்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம். பி அவர்கள் பேசினார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் தங்கவேலு, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி பொதுக்குழு உறுப்பினர் தேவா, மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், புனிதா, ராஜதுரை, பொருளாளர் இல.சரவணன், ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, லாலா சங்கரபாண்டியன், சேர்மதுரை, குணசேகரன், பால்ராஜ், ராமச்சந்திரன், கிறிஸ்டோபர், நகர செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணிசாமி, நகர்மன்ற தலைவர் கௌசல்யா, மாவட்ட அணி அமைப்பாளர்கள் சிவசங்கரி, உதயகுமார், அழகுதுரை, பேரூர் செயலாளர்கள் சேது சுப்பிரமணியன், குருசாமி, மாரிமுத்து, தொ.மு.ச மின் வாரியம் மகாராஜன், நடராஜன், உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம், காசான்கோட்டை கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு எதிர்வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் எடுத்துக்கூறி வாக்கு சேகரிக்கவேண்டும், இரண்டாவது முறையாக தலைவர் தளபதி தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்க நாம் அயராது உழைத்திடவேண்டும் என உரையாற்றினார். உடன் தா.பழூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.அண்ணாதுரை உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கிளை கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## எல்.ஓ.சி.எஃப் என்ற பெயரில் காவிக் கொள்கை திணிப்பு!

# செப்.8 இல் திராவிட மாணவர் கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, செப்.7 -

ஒன்றிய அரசின் எல்.ஓ.சி.எப் வரைவு அறிக்கையைக் கண்டித்து திராவிட மாணவர் கழகத்தின் சார்பில், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில், வரும் 8.9.2025 அன்று நடைபெறும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசு திணித்த தேசியக் கல்விக் கொள்கையின் விளைவாக நாளும் கல்வித் துறையின் மீது தாக்குதல்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. அண்மையில் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC University Grants Commission) வெளியிடப்பட்டுள்ள எல்.ஓ.சி.எஃப் (LOCF Learning Outcomes based Curriculam Framework) எனப்படும் "கற்றல் விளைவு அடிப்படையிலான பாடத்திட்டக் கட்டமைப்பு" பாரம்பரிய பாரத அறிவை முன்னிறுத்துதல் என்ற பெயரில் பிற்போக்குத்தனமான காவிக் கொள்கையின் கூறுகளை வெளிப்படையாகக் கொண்டிருக்கிறது. முன்மொழியப்பட்டுள்ள பாடத்திட்டம், பண்டைய கணிதம், வானியல் மற்றும் கலாச்சார பாரம்பரியம் உள்ளிட்ட பாரம்பரிய இந்திய அறிவு அமைப்புகளை முக்கிய உயர்கல்வியில் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று சொல்லப்படுகிறது.

அதன் வெளிப்பாடாக, வேதியியல் பாடத்திற்கான கட்டமைப்பு சரஸ்வதி வந்தனத்துடன் தொடங்குகிறது. பண்டைய இந்தியாவின் வேத கலாச்சாரத்தின் வேதியியல் மரபு என்று பாடம் வைக்கப்படுகிறது.

### வேத பாட சாலையாக மாற்றத் திட்டம்!

கணிதப் பாடத்தில், காலகணனா (பாரம்பரிய இந்திய நேரக்கணிப்பு), பாரதிய பிஜ்கனித் (இந்திய இயற்கணிதம்) மற்றும் புராணங்களின் முக்கியத்துவம் போன்ற கருத்துகளில் இந்த வரைவு கவனம் செலுத்துகிறதாம்! பல்லுறுப்புக்கோட்டுப் பிரிவிற்கான 'பரவர்த்ய யோஜயேத் சூத்திரம்' உட்பட வேத கணிதத்திலிருந்து நுட்பங்களையும் மாணவர்கள் படிப்பார்களாம். மேலும் 'இந்திய நாட்காட்டி (பஞ்சங்கா) குறித்தும் சடங்குகளுக்கான நல்ல நேரங்களை (மஹூர்த்தங்கள்) தீர்மானிப்பதில் அதன் பங்கு பற்றியும் அறிந்து கொள்வார்கள். பாடத்திட்டம் பண்டைய ஆய்வகங்கள், உஜ்ஜயினியின் முக்கிய நடுக்கோடு, மற்றும் காதிஸ், விகாதிஸ் போன்ற பாரம்பரிய நேர அலகுகளுக்கும் IST மற்றும் GMT போன்ற நவீன அமைப்புகளுக்கும் இடையிலான ஒப்பீடுகளையும் ஆராய்கிறது' என்று உலகின் அதிநவீன அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படையாக இருக்கும் கணிதத் துறையை, வேத பாட சாலை போல மாற்றுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

வரலாற்று பாடத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் என்று 'மன்னிப்பு கடித மாவீரர்' சாவர்க்கர் பெயரை முன்னிறுத்துவதும், மூடநம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் பாட கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் வழிகாட்டி இருப்பதும் அசல் ஆர்.எஸ்.எஸ். கொள்கைகள் ஆகும்.

இந்தப் பாடத்திட்டத்தில் சூரிய சித்தாந்தம் போன்றவற்றைக் கொண்டுவந்து, யுகங்கள், கல்பங்கள் முதல் பிரம்மாவின் நாள் (பிரம்ம வர்சா) வரையிலான அண்ட காலச் சுழற்சிகளையும், விஷ்ணு வர்சா, சிவ வர்சா போன்ற தெய்வீக சுழற்சிகளையும் விளக்கும் பாடங்கள் இடம்பெறுமாம், இடம் பெறவேண்டுமாம்!

கவுடில்யரின் அர்த்தசாஸ்திரம், உபநிடதங்கள், ராமாயணம், மகாபாரதம் மற்றும் காளிதாசர் போன்ற பாரம்பரிய படைப்புகளில் இருந்து அரசியல் கருத்துகள், ராமராஜ்ஜியம் போன்ற கருத்துகளெல்லாம் வணிகக் கல்வியில் இணைக்கப்பட்டுள்ளன.

'ஜோதிடம் அறிவியல் அல்ல' என்று நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டனரே! இன்றும் அறிவியல்படி நிரூபிக்க முடியாத முட்டாள்தனத்தின் முடை நாற்றம் வீசும் மோசடியை மாணவர்களுக்குத் திணிக்கப் போகிறார்களா? சில ஆண்டுகளுக்கு முன்னால் நோபல் பரிசு பெற்றவரான அறிவியல் அறிஞர் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன், ஜோதிடம் என்பது போலித் துறை என்று வெளிப்படையாக அறிவித்தாரே! அதைத்தான் இந்த 21 ஆம் நூற்றாண்டில் மாணவர்களுக்குக் கற்றுத் தரப் போகிறார்களா?

### ஆர்.எஸ்.எஸ்.சும் பா.ஜ.க.வும் தீவிர முயற்சி!

மதச்சார்பற்ற நாடான இந்தியாவைச் சிதைப்பதற்கு கல்வித் துறையின் வாயிலாக கடந்த 30 ஆண்டுகளாக ஆர். எஸ்.எஸ்.சும் பா.ஜ.க.வும் தீவிர முயற்சியில் இறங்கி உள்ளன.

1998 ஆம் ஆண்டு வாஜ்பாய் தலைமையிலான பாரதிய ஜனதா ஆட்சி நடைபெற்ற போது கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் சரஸ்வதி வந்தனா கூறப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய அன்றைய பொதுச்செயலாளரும், தமிழ்நாட்டின் கல்வி அமைச்சருமான இனமானப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாநாட்டைப் புறக்கணித்து வெளியேறினார் என்பது வரலாறு.

அண்மையில் இந்தியாவின் சுதந்திர நாள் விழாவின்போதும், இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட அண்ணல் காந்தியடிகள், சுபாஷ் சந்திர போஸ், பகத்சிங் ஆகியோருடைய படங்களுக்கு மேல் சாவர்க்கரின் படத்தைப் போட்டு தங்களது ஹிந்துத்துவ புத்தியை காட்டிக் கொண்டனர் ஒன்றியத்தை ஆளும் பாஜகவினர்.

இந்நிலையில் உயர் கல்வித் துறையில் இன்னும் ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையின் தாக்கம் விட்டபாடில்லை.

### கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்!

உயர்கல்வித்துறையில் ஒன்றிய அரசின் 'அனுக்கிரகம்' வேண்டி நிற்கும் சிலரால், தமிழ்நாட்டிலும் சில திணிப்புகள் மறைமுகமாக சில பல்கலைக்கழகங்களில் நடந்து வருகின்றன என்பதையும் அறிய முடிகிறது. ஒன்றிய அரசின் இத்தகைய முயற்சிகளுக்குப் பணிந்து போகும் சிலரின் செயல்பாடுகளைத் தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறை கவனமாகக் கண்காணித்து, உரிய நடவடிக்கைகள் மூலம் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

### தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் திராவிடர் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்!


ஒன்றிய அரசின் எல்.ஓ.சி.எப் வரைவு அறிக்கையைக் கண்டித்து திராவிட மாணவர் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள், சென்னை, விழுப்புரம், சேலம், திருச்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில், வரும் 8.9.2025 அன்று நடைபெறும். திராவிட மாணவர் கழகம், திராவிடர் கழக இளைஞரணி, மகளிர் பாசறைத் தோழர்கள் இவ் வார்ப்பாட்டங்களில் பங்கேற்பார்கள்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் பி.சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் நாளை (08.09.2025 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணி அளவில், செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மண்டலப் பொறுப்பாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1. செப்டம்பர் 15 ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக,

2.செப்டம்பர் 17ல் கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது சம்பந்தமாக,

3.வாக்குச்சாவடி முகவர் சரிபார்த்தல் (BLA2), (BLC),

4.கழக ஆக்கப் பணிகள்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான், எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நரசிபுரத்தில் யானை தாக்கி படுகாயம் அடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் பத்ரகிரி என்பவரை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, வெள்ளிமலை பட்டினம் ஊராட்சி முன்னாள் மன்ற தலைவர் சுகன்யா ராஜரத்தினம் ஆகியோர் உள்ளனர்.



திராவிட மாடல் நல்லாட்சி புரியும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில், 100 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறவிருக்கும், கரூர், திருக்காம்புலியூர், லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோவில் குடமுழுக்கு விழா திருப்பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் மற்றும் திருப்பணி குழு உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.

## கோவை மாநகராட்சியில்

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

கோவை, செப். 7 -

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.29க்குட்பட்ட கணபதி, பட்டியப்பா கவுண்டர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமினை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், ஆகியோர் முன்னிலை யில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளுக்கு உடனடி ஆணையினை வழங்கினார்.

உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.பிரசாத், வடக்கு மண்டலத்தலைவர் வே.கதிர்வேல், உதவி ஆணையர் முத்துசாமி, உதவி செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் சரண்யா, கண்ணகி ஜோதிபாசு, சித்ரா வெள்ளியங்கிரி, அம்பிகா தனபால், உதவி நகர திட்டமிடுநர் சத்யா, மண்டல சுகாதார அலுவலர் முருகன், உதவி வருவாய் அலுவலர் அஸ்கர் பாஷா, உதவி பொறியாளர் சக்திவேல் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி 3ம் மண்டலத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கான சான்றிதழை ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்வில் பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகரன், உதவி ஆணையாளர் அண்ணாதுரை, உதவி செயற்பொறியாளர் ஆனந்த், உதவி பொறியாளர் கிருபாகரன், மண்டலத் தலைவர் சசிகுமார், மாமன்ற உறுப்பினர் ரேவதி திருநாவுக்கரசு, கே.சந்திரசேகர், மாவட்ட மருத்துவணி துணை அமைப்பாளர் குத்தூஸ் ஜியாபுதீன், வட்டச் செயலாளர் மீன் கணேசன், வீராசாமி, கதிர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.